# 12 பெறுநருக்கு ஏற்றவாறு எழுதுதல் கவர்ச்சியான எழுத்துகளை வடிவமைத்தலும் எடுத்துரைத்தலும்

**இலக்கு**

எழுதுதல் ஒரு தொடர்பாடற் செயற்பாடாகும், தன்னாட்டு மொழி வகுப்பறையிலுள்ள மாணவர்கள் இதனைக் கற்பதுடன் விளங்கிக்கொள்ளவும் வேண்டும். தங்கள் பாரம்பரியமொழியில் பல வடிவங்களிலமையும் எழுத்துருக்களை எவ்வாறு கவர்ச்சியாக வடிவமைத்து எடுத்துரைக்கலாம் என்பதை அவர்கள் கற்கவேண்டும். எனவே முடியுமாயின் ஆசிரியர் ஒப்படைக்கப்பட்ட எழுத்து வேலையின் இலக்கு, வாசகர் யார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும், வடிவமைப்பு அல்லது முன்மொழியப்பட்ட கருத்திட்டம் பற்றித் தெளிவாகச் சுட்டவேண்டும் (அதாவது, ஒரு நூல், சுவரொட்டி, அல்லது ஒரு காணொளி இறுவெட்டு). எதிர்பார்க்கும் பெறுநரின் நோக்கையும், தயாரிப்பு நோக்கு நிலையையும் அறிந்துகொள்வதால் மாணவர்களின் எழுத்து வேலைக்கான செயல்நோக்கினைப் பெருக்கி, முறையான கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்ட எழுத்துருக்களை ஆக்குதற்குரிய அவர்களுடைய முயற்சிகளை மிகைப்படுத்துகிறது. எனவே மாணவர்கள் தாம் வெறுமனே ஆசிரியருக்காக எழுதவில்லை, தம் எழுத்துருக்கள் உண்மையில் மெய்யான பெறுநரைக் கொண்டிருக்கும் என்பதை அறிந்துகொள்வர்.

### 1. எழுத்துருவை யாருக்கெல்லாம் எழுதலாம். சாத்தியங்கள்

கருவிகள்:
வேறுபாடுகளைப் பொறுத்து அமையும் (வலதுபக்கம் பார்க்கவும்)

- ஒரு வகுப்புக்கு அல்லது குழுவுக்கு: எழுத்துருக்கள் (எ.கா. கதைகள், கவிதைகள்) வகுப்புக்கு உரத்துப் படிக்கப்படும், அல்லது 2 – 3 வாசிப்புக் குழுக்களுக்குப் பகிரப்படும்.
- எடுத்துரைப்புகளில் ஈடுபடும் ஒருவருடைய வகுப்புக்கு அல்லது குழுவுக்கு (எ.கா. பிறந்த நாடு பற்றிய ஒரு குறிப்பிட்ட தலைப்புப் பற்றி, முடியுமாயின் பவர் பொயின்ற் உதவி அல்லது சுவரொட்டிகளுடன்)
- இளம் மாணவர்களுக்கு: மூத்த மாணவர்கள் தம் இளைய வகுப்புக்காரருக்கு அல்லது வீட்டிலுள்ள உடன்பிறப்புகளுக்கு ஒரு கதையினை எழுதுவர், அல்லது ஒரு நூலினை ஆக்குவர்.
- பள்ளி அமைப்புக்கு புறநிலையிலுள்ள உண்மையான இலக்கு வாசிப்பாளர்களுக்கு: அன்னையர் நாள் மடல், வாழ்த்து மடல் (கிறிஸ்மஸ், புத்தாண்டு முதலியன), பிறந்த நாட்டிலுள்ள உறவினர்களுக்கு அல்லது தெரிந்தவர்களுக்கு அஞ்சல்கள், தாய் நாட்டின் தூதரகம் அல்லது அங்கு அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு.
- பேனா நண்பர்களாக பிறந்த நாட்டிலுள்ள இன்னொரு வகுப்புடன் அல்லது வெளிநாட்டிலுள்ள இன்னொரு பாரம்பரியமொழி வகுப்புடன் தொடர்புகொள்ளல் (அஞ்சல் அல்லது மின்னஞ்சல்).
- ஒரே பள்ளியிலுள்ள மற்றைய மாணவர்களுக்கு: பன்மொழி அறிவித்தல் பலகை ஒன்றினைப் பரிந்துரைக்குக. பாரம்பரியமொழியில் எழுதப்பட்ட பங்களிப்புகளை இணைக்கவும் (உள்ளூர் அல்லது பள்ளி மொழியில் எழுதப்பட்ட ஒரு சிறிய சுருக்கத்துடன்). வேறுபாடுகள்: சமையற்குறிப்பு அல்லது வீர தீரங்கள் பற்றிய பன்மொழி நூல். மேலும் பார்க்கவும் மதியுரைகள் #21.




- மாணவர்களின் பண்பாட்டைச் சேர்ந்த மூத்தவர்களுடனான பண்பாட்டு நிகழ்வுகளுக்கு (பெற்றோர் அல்லது பண்பாட்டு மாலை நேரம் முதலியன): மாணவர்கள் கவிதைகள், மிகச் சிறிய கதைகள் அல்லது எழுத்துப் பகுதிகள், நகைச்சுவைகள் முதலியவற்றை எழுதி எடுத்துரைத்தல்.